கிறிஸ்தவரும் பணமும்

CHRISTIAN AND MONEY

கிறிஸ்தவரும் பணமும்



பின்பு அவர் அவனை நோக்கி : பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார். அல்லாமலும் ஒரு உவமையை அவர்களுக்கு சொன்னார். ஐஸ்வர்யமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது.....பின்பு ஆத்துமாவே உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. நீ இளைப்பாறி புசித்துக், குடித்து, பூரிப்பாய் இரு என்று தன் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்து சொல்லிக்கொண்டான் தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து அந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும் அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார் - லூக்கா 12:15-20

செல்வம் என்பது நமக்கு சொந்தமானவைகளின் மேல் நமக்குள்ள உரிமை வேதம் எழுதப்பட்ட காலங்களில் ஒருவருக்கு சொந்தமான நிலம், அடிமைகள் மற்றும் மிருகங்கள் தான் அவருடைய செல்வம் இன்று செல்வம் என்பதற்கு பணம் என்னும் பொருள் கூட உண்டு.

மேற்சொன்ன வசனத்தில் உள்ள மனிதர் தான் ஐஸ்வரியவானாயிருப்பதனால் குற்றவாளி என்று தீர்க்கப்படவில்லை அவருக்கு அந்த நல்ல விளைச்சலுக்கு முன்பே திரளான ஆஸ்தி இருந்தது.

செல்வத்தின் மீது அவர் வைத்திருந்த பற்று அல்லது ஆசையே அவர் குற்றத்திற்கு காரணம்.

அவருடைய அதிகமாய் விளைந்த தானியத்தை சேர்த்து வைக்கவே ஆசைப்பட்டான். அதை தனது விசுவாச வேலைக்காக பயன்படுத்த அவர் விரும்பவில்லை, அதிக பணம், அல்லது குறைந்த பணம் நான் தேவனோடு கொண்டுள்ள உறவைத் தீர்மானிக்காது.

இந்த உவமையில் சொல்லப்பட்டுள்ளபடி நாம் அதன் மீது கொண்டுள்ள விருப்பமே நம் உறவை தீர்மானிக்கிறது எபிரெயர் 11 இல் அப்போஸ்தலர் பவுல் விசுவாச வீரர்களை பட்டியலிடுகிறார். அவர்கள் தேவனுடைய மிகப்பெரிய பூமிக்குரிய பரிசான பூரண மனித ஜீவனை பெற தகுதியுள்ளவர்களாக எண்ணப்பட்டார்கள். இதில் சிலர் உதாரணமாக தாவீது மற்றவர்களைப் பார்க்கும்பொழுது உலக ஆஸ்திகள் அநேகம் வைத்திருந்தார், இருந்தாலும் அவர்களுடைய விசுவாசமே அவர்களுக்கு பரிசு வாங்கி தந்தது. அவர்கள் தங்களையும், தங்கள் ஆஸ்திகளையும் விசுவாச ஓட்டத்திற்கு அர்பணித்ததால் ஜெயம் கிடைத்தது.



சரியான பிரயாசம் மிக முக்கியம்

மத்தேயு :19:16-22 பணத்தை பற்றி முக்கியமான பாடத்தை நமக்கு கற்றுக்கொடுக்கிறது. இங்கே கர்த்தர் இயேசு நம்மை ஆசீர்வதிப்பது அல்லது குற்றவாளி என தீர்க்கவைப்பது பணத்தின் நாம் வைத்துள்ள பணத்தின் அளவை பொருத்து இராமல் நாம் அதன் மீது வைத்துள்ள விருப்பமே அல்லது ஆசையே என்று தெளிவாக குறிப்பிடுகிறார்.

அந்த பணமுள்ள வாலிபன் நியாயப்பிரமாணதின் ஆவியை நன்றாக பெற்றுள்ளான். அவன் நியாயப்பிரமாணத்தின் எல்லா காரியங்களையும் செய்ய விருப்பமுள்ள பொறுப்பான வாலிபன் கர்த்தரின் கேள்விகளுக்கு உறுதியாக பதில் சொன்னான். இருந்தாலும், கர்த்தர் அவனுடைய

போலியான வேஷத்தையும் தாண்டி அவனுக்குள் இருக்கும் சுயநலத்தை அறிகிறார். அவன் இன்னும் என்னிடத்தில் என்ன குறைவு ? என்று கேட்ட பொழுது கர்த்தர் தேவனுடைய ஆசீர்வாதங்களை அனுபவிக்க அவனை தடை செய்வது அவனிடமுள்ள ஆஸ்திகளின் மேல் அவன் கொண்டுள்ள பற்று ஏன் உடனே உணர்த்திவிடுகிறார். அந்த வாலிபன் தனக்கு உண்டானவைகளை எல்லாம் விற்று தரித்திரருக்கு கொடுக்க சொன்னபோது , அவன் துக்கமடைந்தவனாய் போய்விட்டான் அவனுடைய விருப்பம் சரியா ? மாறாக அவன் கர்த்தரிடம் "நாம் ஏன் இப்படி செய்ய வேண்டும்" என்று கேட்டிருக்கலாம்.

கர்த்தரும், அவன் இப்பொழுது என்ன வைத்திருக்கிறாய் அதை தேவனுடைய ஊழியத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்று விளக்கி கூறியிருப்பார், தன்னுடைய உடமைகளையெல்லாம் கர்த்தருக்கு அர்ப்பணித்து விட்டு அவைகளுக்கு ஒரு மேற்பர்வையாளராக இருந்தால், அவைகளை வைத்திருக்க மற்றும் அவைகளுடைய ஞானமான பயனையும் பார்த்திருக்கலாம் அவனுடைய உடைமைகள் தேவசித்தத்திற்கு பயன்பட உதவியாக இருந்திருக்கும். அவனே ஒரு ஆசீர்வாதமாக இருந்திருப்பான் அவனுடைய தாலந்துகளும் பயன்பட்டிருக்கும். ஆனால், தன் சொத்தை இழக்க நேரிடும் என்ற பயம் அவனை விசுவாசத்திலிருந்து விலக்கியது. கர்த்தர் அவனிடம் சவால் செய்தார் . ஆஸ்திகள் மீது அவன் வைத்திருந்த பற்று பற்றி, கர்த்தரின் ஒரு சீஷனாக அவன் அனுபவிக்கும் சந்தோஷங்களை இழக்கச் செய்தது.



மத்தேயு 25:14-30 கர்த்தர் இயேசு தாலந்துகளை பற்றின உவமையில் , தேவன் தம்முடைய ஜனங்களுக்கு சில தாலந்துகள் அல்லது திறமைகளை வெவ்வேறு விதமாக அவருடைய வேலைகளை செய்வதற்காக கொடுக்கிறார். பின்பு, நாம் இந்த தாலந்துகளை மேற்பார்வை செய்ய அவர் எதிர்பார்க்கிறார். பயந்து போய் தாலந்தை புதைத்து வைத்த ஊழியக்காரர் நாம் முதலில் பார்த்த ஐஸ்வரியவானை போலவும், வாலிபனை போலவும் இருக்கிறான். நாம் நமக்குள் அளிக்கப்பட்ட தாலந்துகளை பயன்படுத்தி தேவனுக்கு ஆதாயம் செய்யவேண்டும். இதுவே தேவன் அவருடைய பொருளாதார வளங்களுக்கு நம்மை மேற்பார்வையாளராக வைத்ததற்கு நீதியும் ஆகும் .

பணத்தை நோக்கமாக வைத்திருப்பது அடிமைத்தனத்தை விளைவிக்கும்

பலர் பணத்தினால் மன வேதனை அடைகின்றனர் கொஞ்ச வேதனை (என்னால் அதை பெற முடியுமா அல்லது எப்படி பெறுவது என்ற கவலை) அதிக வேதனை பணத்தை இழந்துவிடுவோமோ என்ற பயம் நீதிமொழிகள் :30:7-9 சாலமோன் நமக்கு உதவியான கருத்தை தெரிவிக்கிறார் .

7. இரண்டு மனு உம்மிடத்தில் கேட்கிறேன்; நான் மரிக்கும்பரியந்தமும் அவைகளை எனக்கு மறுக்காமல் தாரும்.

8. மாயையையும் பொய்வசனிப்பையும் எனக்குத் தூரப்படுத்தும்; தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக.



9. நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும்; தரித்திரப்படுகிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்.

அதிக பணம் மற்றும் மிக குறைந்த பணம் இரண்டுமே ஆபத்தான வழியில் நம்மை ஈர்க்கும் வறுமையின் போது, நீதியை எதாவது ஒரு செயலின் மூலம் பணம் சம்பாதிக்க நம்மை தூண்டும், அதிக பணத்தால் வரும் ஆபத்து, அது இல்லாமலேயே தேவனிடம் திருப்தியாக இருபது நல்லது .

தற்போது நாம் வாழும் வாழ்கையில் நம்மிடம் உள்ள அளவிற்கு அதிகமான செல்வங்கள் நாம் தேவனை சார்ந்து இருப்பதை அகற்றிவிடும் ஆவிக்குரிய பொக்கிஷங்களை விட பொருளாதார செல்வங்கள் நம் குறிக்கோளாகிவிடும்

ஆகவே சாலமோன் ஒரு திருப்தியான "தேவனையே" முதன்மையாக வைக்கின்ற மனநிலை தரும் வாழ்க்கை முறையையே வலியுறுத்துகிறார்.

இது இல்லையென்றால் நமக்கு செல்வம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாம் பணத்திற்கு அடிமைகளாகிவிடுவோம்.

கடனின் அடிமைத்தனம்

மத்தேயு :5:25,26 கர்த்தர் இயேசு ஒருவன் தனைத்தான் சீர்திருத்தி கொள்ளாமல் இருப்பதும் அவனை கடனின் மூலம் எப்படி பணத்திற்கு அடிமையாக்குகிறது என்று விளக்குகிறார் தன்னுடைய திராணிக்கு மீறி கடன் வாங்குவதை இது குறிக்கிறது. வேதாகம காலங்களில் ஒரு மனிதனால்

தன்னுடைய கடனை செலுத்தமுடியவில்லை என்றால் அவனை கடன்பட்டவர்களுடைய சிறையில் அடைத்துவிடுவார்கள் அவனுக்கு உண்டான யாவையும் கடன் கொடுத்தவருக்கு சொந்தமாகி விடும் அவனுடைய குடும்பம் உட்பட, கர்த்தர் இயேசு திராணிக்கு மீறி கடன் வாங்ககூடாது என்ற கட்டளையை மீறினால் வரும் ஆபத்தைப் பற்றி பேசுகிறார் அவன் வாங்கின கடனைவிட அவன் இழக்கும் பொருள் அதிகமாக இருக்கும் இது பொருளாதார ரீதியிலும் மனஅளவிலும் ஆபத்தை ஏற்படுத்தும் நீதி :17:18 இந்த கொள்கையே விவரிக்கிறது.

"புத்தியீனன் தன் (சிநேகிதனுக்கு) முன்பாக கையடித்து கொடுத்து பிணைப்படுகிறான். இதில் "பிணைப்படுவது" என்பது கடனுக்கு சமானமான ஒரு சொத்தும் அல்லது கடனை திருப்பித்தர முடியும் என்ற நம்பிக்கையும் இல்லாமல் பாதுகாப்பில்லாத கடன் வாங்குவது (surety) அல்லது மற்றவருடைய கடனுக்கு உத்திரவாதம் கொடுப்பது, இந்த கடனை மீறும் போது நாம் பணத்திற்கு அடிமையாகிவிடுவோம்

தேவனுடைய வேலைகளிடமிருந்து பணம் நம்மை திசை திருப்பும், சூழ்நிலைகளில் நாம் சிக்கிக்கொள்ளாதவாறு தேவனே நமக்கு இந்த கட்டளையை கொடுத்திருகிறார் என்பதை நினைவில் கொண்டு இந்த எடுத்துக்காட்டை தியானிப்போம்

நீங்கள் 10 லட்சம் மதிப்புள்ள ஒரு காரை வாங்குவதாக வைத்துக்கொள்வோம் முதலில் 2 லட்சம் கொடுத்து பாக்கி 8 லச்சத்திற்கு ஒரு பத்திரம் எழுதி தருகிறார்கள் இது உங்கள் காரை ஒரு சொத்தாக எண்ணி அடமானம் வைப்பதற்கு சமம், ஏனென்றால் ஒரு பத்திரத்தில் நீங்கள் கையெழுத்து போட்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் அந்த காருக்கு "உத்திரவாதி" ஆகி விடுகிறீர்கள் உங்களால் பணத்தை திருப்பி செலுத்த முடியவில்லை என்றால் உங்கள் கார் கைப்பற்றப்படும் அது அதின்

உண்மையான விலையைக் காட்டிலும் குறைந்த் விலைக்கு அல்லது நஷ்டத்திற்கு விற்கப்படும் இந்த நஷ்டத்தை நாங்கள் ஈடுகட்ட வேண்டும் நீங்கள் பணத்தை செலுத்தவில்லையென்றால் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள் . நீங்கள் வேலை செய்தால் உங்களுடைய சம்பளம் கைப்பற்றப்படும் , நீங்கள் முதலில் காருடைய விலைக்கு அதிகமான பணம் தருவதாக உத்திரவாதம் சொல்லவில்லை என்றால் உங்களால் காரை வாங்கியிருக்க முடியாது. எந்த ஒரு கடைக்காரரும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் கடன் தரமாட்டார் .

இது நீதிமொழிகள் :17:18 இல் சொல்லப்பட்ட தேவனுடைய கட்டளையை மீறாமல் இருப்பதற்கு நாம் பணம் செலுத்த வேண்டும் நீங்கள் அதிகமான முன்பணம் செலுத்தினால் இது தேவையில்லை அதிக பணம் கட்டினால் கார் உங்களுடைய முழு சொத்தாகிவிடும். இது இன்னும் திருப்பி தர வேண்டிய மீதமுள்ள கடனை மறைத்துவிடும். நீங்கள் ஒப்பந்தத்திற்கு விலகி சுதந்திரமாக இருப்பீர்கள் நீங்கள் எந்த சூழ்நிலையிலும் கடனுக்கு அடிமைகளாக மாட்டீர்கள். இது தேவன் தந்த மிக ஞானமான கட்டளையாகும் இதை பின்பற்றினால் நாம் பணத்தின் அடிமைத்தனத்தில் சிக்க மாட்டோம்

ஒரு வீடு வாங்கும் பொழுது இந்த கோட்பாடு மிக அருமையாக புரிகிறது ஓரளவிற்கு அதிகமான முன்பணம் வீட்டின் மதிப்பு குறைந்தாலும், நம்மை ஜாமீன் அல்லது உத்திரவாதத்திலிருந்து காப்பாற்றுகிறது. இதற்கு நம்முடைய பிரயாசத்தைக் காட்டிலும் அதிக கால சேமிப்பு தேவை. ஆனால் இப்படி செய்வது தேவனுடைய கட்டளைகளின்படி வாழ சுய ஒழுக்கத்தை நாம் கடைபிடிப்பதாகும்.

நாம் மற்றவர்களுடைய கடனுக்காக உத்திரவாதம் அளிப்பதிலும், நாம் இம்மாதிரியான சூழ்நிலையில் சிக்கிக் கொள்கிறோம்.

பொருளாதார மேற்பர்வைக்கான கட்டளைகள்

தேவன் நம்மை பொருளாதார வளங்களின் மேற்பார்வையாளராக தெரிந்து கொண்டால், நாம் எடுக்கும் முடிவுகளால் அந்த வளங்கள் பெருகும் அல்லது குறையும் சூழ்நிலைகளை நாம் சந்திக்க கூடும் .

நாம் தேவனுடைய கட்டளைகளின் படி செய்வோமானால் தனக்கு கொடுக்கப்பட்ட தாலந்துகளைக் காட்டிலும் அதிகமாக தன் எஜமானுக்கு திருப்பிக்கொடுத்த உண்மையும் உத்தமமுமான ஊழியகாரனைப் போலிருப்போம் பணத்தையே சம்பாதிக்க யோசிக்காமலும், பணம் வாங்காமலும் இருங்கள் குறைந்த மூலதனத்தில் அதிகபணம் திரும்ப கிடைக்கும் என்று சொல்லுகின்ற கிடத்தட்ட எல்லா திட்டங்களும் அநீதி அல்லது தவறானதாகவே உள்ளது.

இப்படிப்பட்ட திட்டங்களில் சேர்ந்தால் அது நிச்சயமாக நமது பணத்தை, மதிப்பை குடும்ப ஆரோக்கியத்தை குறைத்துவிடும் *(1 தீமோத்தேயு :6:9)*

தற்போதைய பொருளாதார சூழ்நிலைக்கு தகுந்த மாதிரி பணம் வைத்துக்கொள்ளுங்கள் நம்முடைய பொருளாதார சுதந்திரத்தை ஆபத்தில் சிக்கவைக்கும் எந்த ஒரு சூழ்நிலையையும் தவிர்த்து விடுங்கள் உங்களுடைய திராணிக்கு தகுந்த ஜீவியம் செய்யுங்கள் தற்போதைய கடனை செலுத்துவதற்காக பெரிய அதிர்ஷடத்தை, நம்பும் சூழ்நிலையை தவிர்த்து விடுங்கள், இது சாத்தியமற்ற நம்மை நாமே அறுதல் படுத்திக் கொள்ளும் முடிவுகளை எடுக்கச் செய்யும் *(லூக்கா 14:28)*

நாம் தேவனுடைய பணிகளை செய்வதற்கு தேவையான வருமானதிற்குரிய வாய்ப்புகளை தனியாக வைத்துக்கொள்ள வேண்டும். நாம் தேவன் மேல் விசுவாசம் வைக்க வேண்டும் ஆனால் நாம் எந்த ஒரு ஆதாரமுமில்லாமல் (அல்லது வழிகளில்லாமல்) ஒரு காரியத்தை செய்யத் துணியக் கூடாது வாய்ப்புகளே இல்லாத சூழ்நிலையில் தேவன் எனக்கு பண உதவி செய்வார் என்று இருப்பது தேவனை சோதிப்பது போலாகும் *(மத்தேயு :4:7)*

"மற்றவருக்கு கடனுக்கு கொடுக்காமல் தேவைப்படும் சூழ்நிலையில் மற்றவருக்கு இலவசமாக கொடுங்கள்"

வசனங்கள் கடன் கொடுப்பது பற்றி சொன்னாலும் மற்றவருக்கு இலவசமாக கொடுப்பது ஒரு சிறந்த பிரமாணம் ஆகும் *(2 கொரிந்தியர் :9:13, லூக்கா :14:12-14)*

மற்றவருக்கு உடன் கையெழுத்திடுவதை தவிர்த்து விடுங்கள் மற்றவருடைய கடனுக்கு உத்திரவாதம் அளிப்பது நம்முடைய குடும்பம் மதிப்பு, பண ஆரோக்கியத்தை பாதிக்கும் *(நீதிமொழிகள் :6:1, 17:18, 27:13)*

தேவைகேற்ப பொருள்களை வாங்குங்கள் நமக்கு என்ன தேவையோ அதை தருவேன் என்று தான் நம்முடைய தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் மனவருத்தம் திருப்தி இல்லாத தேவைகள்,

விருப்பங்களால் ஏற்படும் நம்முடைய தேவையிலும் ஆடம்பரத்திலும் உள்ள வித்தியாசத்தை நாம் உணர வேண்டும் (1 தீமோத்தேயு :6:8)

வற்புறுத்தலால் எந்த ஒரு பொருளாதார முடிவுகளையும் எடுக்க வேண்டாம், தொலைப்பேசியின் மூலம் வரும் வாய்ப்புகள் "இப்போதே சேர்ந்து விடுங்கள்" என்ற கொள்கையை கொண்டு இருக்கின்றன. பல திட்டங்களுக்கு நாம் யோசித்து முடிவெடுக்க "3 நாள்" கால அவகாசம் தேவைப்படுகிறது. அதற்குள் நாம் அதை தவிர்த்து விடலாம் இந்த கொள்கையை, நன்மையானதாக மனிதன் கருதினால் தேவன் தந்த மேற்பார்வைக்கு இது எவ்வளவு சரியானது (நீதிமொழிகள் :21:5)

தேவன் நம்மை தாழ்த்தினாலும், உயர்த்தினாலும் அதை ஏற்றுக்கொள்ளுங்கள், நம்முடைய மிகுதியை காட்டிலும், நம்முடைய தேவைகளில் சிலநேரம் தேவனுடைய சித்தம் நிறைவேறும். கிறிஸ்துவுக்கு உள்ளான வாழ்க்கை சூழ்நிலைகளைப் பொருத்து இருக்காது (பிலிப்பியர் :4:12,13)

"பணத்திற்கு அடிமையாவதிலிருந்து தற்காத்தல்"

நம்மிடம் பணம் இல்லையென்றாலும் நம்மையும் நம்முடைய கவனத்தையும் தேவனுடைய வேளைகளிலிருந்து திசை திருப்ப முடியாத மன நிலைமையை நாம் பெற்றிருக்கிறோம் என்று எவ்வாறு நம்மால் உறுதியளிக்க முடியும்?

தேவனுடைய வார்த்தைகளைஆதாரமாக வைத்து ஆதாரமாக சொல்லப்படும் உறுதியான பிரமாணங்களை கடைபிடிப்பதன் மூலம் நம் பணத்திற்கு அடிமையாகும் சிந்தையைத் தவிர்த்து விடலாம்.

தேவனிடம் உரிமையைக் கொடுத்துவிடுங்கள் நாம் உடன்படிக்கை செய்கின்ற போது, நம்முடைய உடைமைகளை எல்லாம் அவரிடத்தில் ஒப்படைக்கின்றோம் நாம் நம்மைக்காடிலும் ,



அவரிடத்திலேயே கவனம் செலுத்துவதால் உலக ஆஸ்திகளுக்கு நம்முடைய சிந்தை செல்லாது. தேவன் நமக்கு தேவையானதை தருவார் என்று உணர்ந்திருப்போம் *(நீதிமொழிகள் :3:9,10)*

கடனிலிருந்து வெளியே வாருங்கள், பழைய கடன்களை நாம் செலுத்தும் பொழுது நாம் வைத்துள்ள பொருளின் மதிப்பைக் காட்டிலும் நாம் அதிகமாக செலுத்துகிறோம் நாம் அதை திருப்ப வேண்டும் நம்முடைய சுய ஒழுங்குகளைக் கொண்டு நாம் வட்டி செலுத்தும் பொழுது நஷ்டமடைகிறோம். நாம் அதிகமாக கடன் வாங்கும் பொழுது அது நம்மை பண அடிமைதனத்திற்கு கொண்டு போய் விடுகிறது *(ரோமர் :13;8)*

தேவனுடைய வழிநடத்துதலை ஏற்றுக்கொள்ளுங்கள் தேவன் நம்முடைய தேவைகளை சந்திப்பார் என்று நீங்கள் விசுவாசித்தால் பணமின்மையால் வரும் கவலை நீங்கி விடும் *(மத்தேயு :6:31,32)*

தேவனுடய வேலைகளை செய்வதில் முன்னேறுங்கள் நாம் முன்னேறுபவராக இருந்தால் சோம்பேறித்தனம் எந்த பிரச்சனையையும் ஏற்படுத்தாது. தேவன் நாம் ஊக்கமாக ஜாக்கிரதையாக ஊளைக்க் வேண்டும் மற்றும் நன்றாக செய்ய வேண்டும் என்று எதிர்பார்கிறார். எல்லா வேலைகளும் தேவனுக்காக செய்யப்படுவதால் நாம் எந்த வேலையையும் செய்ய தயாராக இருக்க வேண்டும் *(1 பேதுரு :4:11)* சீற்படுதுங்கள் நம்முடைய பழைய தவறான பழக்கங்களால் இதை செய்வது கடினமாக இருந்தாலும் முதலில் நம்முடைய பழைய பழக்கங்களால் ஏற்பட்ட விளைவுகளை சரி செய்ய வேண்டும் திரும்ப சரி செய்யுதல் அல்லது ஈடுகட்டுதல் தேவனுடைய கட்டளைகளில் அதிகமாக வருவதைக் காணலாம் *(மத்தேயு :5:24)*

உள்ளத்தில் திருப்தியாக இருங்கள் பேராசை மற்றும் பொருளாசை திருப்தின்மையாதலால் வரும். நடுத்தரமான வாழ்க்கைமுறை பற்றிய ஞானம் நம்முடைய ஆவிக்குரிய மாம்சத்திற்குரிய மனதிற்குரிய நன்மைக்கு மாத்திரம் இல்லாமல் பொருளாதார நன்மைக்கு அவசியம் ஆகும் *(1 தீமோத்தேயு :6:6,7)* குடும்பத்தின் தேவைகளை முதலில் நிறைவேற்றுங்கள் இது நம்மை நாமே தியாகம் செய்வது மற்றும் சுய தேவைகளை தவிர்பதையும் குறிக்கும் இதுவே சுய ஒழுக்கத்திற்கு ஆரம்பமும் கிறிஸ்தவவாழ்க்கைகாக தேவன் தந்த அடிப்படையான கற்பனையும் ஆகும் *(1தீமோத்தேயு :5:8) யாக்கோபு :4:3)*உங்களால் முடிந்த அளவு வாக்களிப்பதை வைத்துக்கொள்ளுங்கள் எந்த ஒரு மனிதனும் தன்னுடைய சாகும் தருணத்தில் இவ்வாறு சொன்னதில்லை " நான் என்னுடைய அலுவலகத்தில் அதிக நேரம் செலவளிததற்காக சந்தோஷமடைகிறேன்"அதிக நேரம் வேலை செய்வது அல்லது இரண்டாவதாக இன்னொரு பணி செய்வது பல நேரங்களில் ஒரு நல்ல வாழ்கையை வாழ்வதற்காகத்தான் செய்கின்றேன் என்ற போர்வையால் நியாயப்படுத்தப்படும் *(நீதிமொழிகள் :23:4,5)*

சுய விருபங்களை தியாகம் செய்துவிடுங்கள் செல்வம் சேர்பதற்காக விளைவது பாவம். இது தேவன் நாம் வறுமையில் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார் என்று குறிக்காது. நாம் ஊதாரித்தனமான வாழ்கை முறைக்கும் குறைத்து அதே சமயம் "ஐசுவரியவான்கள் மற்றும் பிரபலமானவர்களின் வாழ்க்கை முறைகளால்" கவரப்படாமலும் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் *(பிரசங்கி :2:10,11, மத்தேயு :6:24)*

நல்ல மேற்பார்வை நல்ல மனநிலைமையின் பிரதிபலிப்பு

பணத்தினுடைய பயன்பாடு தான் அதை விலைமதிப்புள்ள தாக மாற்றுகிறது. அதனை பெற்றிருக்கிற ஒவ்வொரு கிறிஸ்தவரும் அதனுடைய மேற்பார்வை பற்றி கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.